136—

உயிர்ம விளைபொருட்கள்

***132—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:**

மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சத்துணவுத் திட்டத்தில் உயிர்ம விளைபொருட்களை வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

தமிழ்நாட்டில் செயல்படும் அரசு மற்றும் அரசு நிதியுதவிபெறும் பள்ளிகளில் 43,190 சத்துணவு மையங்கள் இயங்கி வருகின்றன. இம்மையங்களுக்குத் தேவைப்படும் செறிவூட்டப்பட்ட அரிசி, செறிவூட்டப்பட்ட எண்ணெய், உப்பு, பருப்பு, கொண்டைக் கடலை, பச்சைப் பயறு ஆகிய உணவுப் பொருட்கள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மூலம் விநியோகிக்கப்படுகின்றன. முட்டை, தமிழக அரசினால் மண்டல வாரியாக கொள்முதல் செய்யப்படுகிறது. மேலும், காய்கறிகள் மற்றும் தாளிதப் பொருட்கள் அந்தந்த மையங்களில் பணிபுரியும் சத்துணவு அமைப்பாளர்கள்மூலம் உள்ளூர் பகுதியிலேயே வாங்கப்பட்டு, சுகாதாரமான உணவு சூடாக சமைக்கப்பட்டு, மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. தற்பொழுது சத்துணவுத் திட்டத்தின்கீழ் முதற்கட்டமாக 10,024 மையங்களில் காய்கறித் தோட்டங்கள் அமைக்கப்பட்டு, அதில் விளைவிக்கப்படும் காய்கறிகளைப் பயன்படுத்தி உணவு சமைக்கப்படுகிறது. ஏனைய அனைத்து மையங்களிலும் காய்கறித் தோட்டம் அமைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. சத்துணவுத் திட்டமானது, ஒன்றிய மற்றும் மாநில அரசுகளினால் முறையே 60 சதவிகிதம் மற்றும் 40 சதவிகித நிதிப் பங்களிப்பில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டமாகும். மாநிலம் முழுவதும் பரவலாக இயங்கும் சத்துணவு மையங்கள் ஒன்றிய அரசின் அரிசி ஒதுக்கீடு, அதிக அளவிலான கொள்முதல் செலவினங்கள் ஆகியவற்றினை உள்ளடக்கிய

2022 ஏப்ரல் 20]
விவரங்களை நோக்கும்போது, தற்போது சத்துணவுத் திட்டத்தில் உயிர்ம வேளாண் பொருட்களை பயன்படுத்த வழிவகை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சராக தளபதி அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, முதன்முறையாக வேளாண்மை நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. கடந்த ஆண்டு வேளாண்மைத் துறை பட்ஜெட்டில், நம்மாழ்வார் இயற்கை வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்படும் என்று அறிவிப்பு செய்யப்பட்டது. அதுமட்டுமல்லாமல், இந்த ஆண்டு வேளாண்மை பட்ஜெட்டிலும்கூட இயற்கை வேளாண்மைக்கு ஊக்கம் அளிக்கக்கூடிய பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. ஏறத்தாழ, 50 இலட்சம் மாணவர்கள் சத்துணவு சாப்பிட்டு வருகிறார்கள்.* Barcelona Institute for Global Health *போன்ற பல ஆய்வு நிறுவனங்கள், இரசாயனம் கலக்காத பூச்சிக்கொல்லி மருந்தைப் பயன்படுத்தாத காய்கறிகள், அரிசி மற்றும் இயற்கையான முறையில் விளைந்த உயிர்ம வேளாண்மைப் பொருட்களை மாணவர்கள் உட்கொள்ளும்போது அவர்களுடைய* Fluid intelligence *என்று சொல்லக்கூடிய புதுமையான, சிந்தனைகளைத் தூண்டும் மற்றும் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய அறிவாற்றல் அவர்களுக்கு வருகிறதென்றும் அதேபோல,* working memory, *குறைந்த நேரத்திலே புதிய தகவல்களை சேகரிக்கக்கூடிய* capacity, *தகுதி அவர்களுக்கு வருகிறதென்றும் சொல்கின்றார்கள். எனவே, எதிர்கால சமுதாயத்தினுடைய நலனைக் கருத்தில்கொண்டு சத்துணவில் இயற்கை உணவுகளை, உயிர்ம விளைபொருட்களை அளிப்பது ஒரு சிறப்பான, எதிர்கால சமுதாயத்திற்கு நலன்பயக்கக்கூடிய ஒன்றாக இருக்கும். எனவே, இந்த அரசு இப்படிப்பட்ட ஒரு முடிவினை எடுக்க முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.*

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயிர்ம வேளாண்மைப் பொருட்கள் என்று கூறினாலே அதன் விலை எந்த அளவிற்கு நிர்ணயிக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், நாங்களும் அறிவோம். அதேபோல, இந்தத் திட்டத்தில் ஒன்றிய அரசு செறிவூட்டப்பட்ட அரிசி வழங்குகிறது. அதில், Vitamin A, B_1, B_2, B_3, B_6, B_{12}, Folic Acid இரும்பு மற்றும் துத்தநாகம் என இவ்வளவையும் சேர்த்து அந்த அரிசியைக் கொடுக்கிறார்கள். நூறு கிலோ அரிசிக்கு, ஒரு கிலோ செறிவூட்டப்பட்ட அரிசி என்று கலந்து சமைக்கப்படுகிறது. அதேமாதிரி உப்பு என்று பார்த்தால், Iodine மற்றும் இரும்புச் சத்து கலந்து ஒன்றிய அரசினால் வழங்கப்படுகிறது. அதேபோல, எண்ணெய் என்று பார்த்தால் Vitamin A and D என கலந்து வழங்குகிறார்கள். ஆக, இப்படியெல்லாம் கலந்து கொடுக்கிறோம். அப்போதுதான் பிள்ளைகளுக்கு ஊட்டச்சத்து நன்றாகக் கிடைக்கும் என்று சொல்லி வழங்கப்படுகிறது. ஆகவே, இதில் உடனடியாக அரசு ஒரு முடிவினை எடுக்க முடியாது. எனினும், மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை இந்த அரசு கருத்தில்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்திருக்கிறார். ஒரு கோரிக்கையை வைக்க விரும்புகின்றேன். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சத்துணவில் முட்டை வழங்கக்கூடிய ஒரு திட்டத்தை அமல்படுத்தினார். அது மாணவர்களுக்கு மிகப் பயனுள்ளதாக இருந்தது. அதேபோல சத்துணவில் தேங்காய் துண்டு ஒன்றை, மதிய உணவில் சேர்ப்பதற்கு இந்த அரசு முன்வருமா? அதேபோல, இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் ஏறத்தாழ 30 ஆயிரம் சத்துணவு அமைப்பாளர்கள், சமையலர்கள், சமையல் உதவியாளர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏறத்தாழ 600 முதல் 1,500 காலிப் பணியிடங்கள் இருக்கின்றன. இதன் காரணமாக ஒரு சத்துணவு அமைப்பாளர் 4 மையங்களுக்கான பொறுப்பைப் பார்க்கக்கூடிய நிலை இருக்கின்றது. அதேபோல ஒரு சமையலர் மூன்று இடங்களில் அந்த பொறுப்பைப் பார்க்கக்கூடிய நிலை இருக்கின்றது. எனவே, இந்த அரசு இந்தக் காலிப் பணியிடங்களை

2022 ஏப்ரல் 20]

உடனடியாக நிரப்பி, சத்துணவு மையங்கள் மேலும் சிறப்பாகச் செயல்படுவதற்கு வழிவகுக்குமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மதிய உணவின்போது ஒரு தேங்காய் துண்டு வழங்கலாம் என்று ஆலோசனை கூறினார்கள். அதேபோல, சத்துணவுத் துறையில் காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும் என்று கூறினார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை இந்த அரசு பரிசீலிக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 137, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

137—

புதைவடங்கள்

***1915—திரு. கே. பொன்னுசாமி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை பகுதியில் உள்ள மின்கம்பிகளை பூமிக்கடியில் புதைவடங்களாக மாற்றியமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை பகுதியில் உள்ள மின் கம்பிகளை பூமிக்கடியில் புதைவடங்களாக மாற்றியமைக்கும்